# நடப்பு நிகழ்வுகள்- மே 17 - 2017

- **“உயர் கல்வியின் தரத்தை முன்னேற்ற பிளஸ் 1 வகுப்பில் பொதுத் தேர்வை கட்டாயமாக்க வேண்டும்** என பள்ளிக் கல்வித் துறைக்கு அண்ணா பல்கலை பரிந்துரை கடிதம் அனுப்பியுள்ளது.

- **பிரான்ஸ்** நாட்டின் **புதிய பிரதமராக எட்வர்ட் பிலிப்** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

- இந்தியாவில் உள்ள கடலோர மற்றும் கடல்சார்ந்த தீவுகளின் மொத்த எண்ணிக்கை 1,382 ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது.

- தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நடைபெற்ற **லட்சுமி அம்மாள் நினைவுக் கோப்பைக்கான அகில இந்திய ஹாக்கி போட்டியில் செகந்திராபாத் தெற்கு மத்திய ரயில்வே அணி சாம்பியன் பட்டம்** வென்றது.

- **ஜி 7** (G7) அமைப்பின் **53 வது கூடுகை** இத்தாலியிலுள்ள **தோர்மினைன் சிசிலி** (Tarominain Sicily) **நகரில் நடைபெற்றது.**
  “ஆறு நாடுகளின் குழு” (Group of Six) என்ற பெயரில் பிரான்ஸ் , ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் , இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டு 1975 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. ஏழாவது நாடாக கனடா 1976 ஆம் ஆண்டு இணைந்ததையெபட்டி இவ்வமைப்பின் பெயர் ஜி 7 நாடுகள் என அழைக்கப்பட்டு வருகிறது.

- **வாரணாசியை “ஸ்மார்ட் நகரமாக”** மாற்றுவதற்காக ஐ.ஐ.டி காரக்பூர் மற்றும் இங்கிலாந்தின் பிரிட்டிஸ் ஜியாலஜிக்கல் சர்வே நிறுவனமும் கூட்டு **முயற்சி**யில் ஈடுபட்டுள்ளன.

- **தமிழகத்தில் ஜுன் முதல் ஏழு மாதங்களுக்கு ஜல்லிக்கட்டு நடத்த அரசு தடை விதித்துள்ளது.** கடந்த காலங்களில் கோவில், சர்ச் விழாக்களை ஒட்டி ஆண்டு முழுவதும் ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டது. ஆனால் ஜுன் முதல் விவசாய பணிகள் துவங்கிவிடும் என்பதால் ஜனவரி முதல் மே வரை மட்டுமே ஜல்லிக்கட்டுக்கு அனுமதி தரப்படும் என அரசு உத்திரவிட்டு உள்ளது.

- **சீனா** மற்றும் **தென் கொரியா** நாடுகளில் **“இந்திய மாம்பழத் திருவிழா”** (mango festival) நடத்த இந்திய அரசு திட்டமிட்டுள்ளது.

- **APEDA** – Agricultural and processed Food Products Export Development Authority விவசாய மற்றும் பதப்படுத்தப்பட்ட **உணவுப் பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம்** எனப்படும் இவ்வமைப்பின் **தலைவலராக தேவேந்திர குமார் சிங்** செயல்படுகிறார்.

- **2050 ம் ஆண்டு ஐந்தில் ஒருவருக்கு 60 வயதிருக்கும் என ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.** தற்போது 12 – ல் ஒருவருக்கு 60 வயதுள்ளது. ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மேம்பாட்டு ஆணையம் (பி.எ.ஃப்ஆர்டிஏ) மற்றும் க்ரிஸில் அமைப்பு நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது. 2015 ல் கிட்டத்தட்ட 90 சதவீதம் பேர் 60 வயதிற்குக் கீழ் இருந்தார்கள் மற்றும் வேலைத்திறன் நபர்களின் எண்ணிக்கை மக்கள் தொகைளில் 44 சதவீதம் இருந்தது குறிப்பிடத்தக்கது.

- **உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமுதாய தினம்** (World Telecommunication and Information Society Day) – **மே 17**

- சர்வதேச பாலியல் சிறுபான்மையினர் மீதான உரிமை மீரல்களுக்கெதிரான தினம் (International Day against Homophobia, Transphobia & Biphobia) – மே 17

- இந்தியாவிலேயே முதல்முறையாக சென்னை தியாகராய நகர் பகுதியில் உள்ள **சிட்டி யூனியன் வங்கி கிளையின் வாடிக்கையாளர் சேவையில் மனித உருக்கொண்ட ரோபோ ஈடுபட்டுள்ளது.** வாடிக்கையாளரின் கேள்விகளுக்கு பதிலளிக்கவே இந்த ரோபோ பணன்படுத்தப்படுகிறது. குரல் மற்றும் தரவு உள்ளீடு வழியாக கேட்கப்படும் கேள்விகளுக்கு இந்த ரோபோ துல்லியமாக பதில்அளிக்கிறது.

- ஒற்றை ஓடுபாதை கொண்ட விமான நிலையங்களில் **உலகின் மிக பரபரப்பான விமானநிலையமாக மும்பை விமான நிலையம் உருவெடுத்துள்ளது.** இருப்பினும் **பயணிகளை அதிக அளவில் கையாள்வதில் தில்லி விமான நிலையமே முன்னிலை** வகிப்பது குறிப்பிடத்தக்கது.